1990 ஆகஸ்ட் 21]

அறநிலையத் துறையின் மூலமாக, அந்தக் கல்வெட்டுக்களில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் அரசு ஆய்ந்து அறிவிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கல்வெட்டுக்களிலே என்ன இருக்கின்றன என்பதை ஆய்ந்து சொல்வதற்கு வேலூரில் இருக்கும் தொல்பொருள் துறையினரிடம் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, களப்பிரர்கள் அங்கே படையெடுத்ததன் காரணமாக பல்லவ நாட்டில் வாழ்ந்த மக்கள், குறிப்பாக ராஜ குடும்பம், ஜவ்வாது மலையில் தான் தஞ்சம் புகுந்தது என்று வரலாறு கூறுகிறது. அவர்கள் காலத்தில் புராதனமான பல கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கோவிலூர் கோயில் மட்டுமல்லாமல், நெல்லிவாசலிலே இருக்கின்ற பகவதி கோயில் மிகப் பிரசித்தி பெற்ற ஒரு கோயிலாகும். அதே நேரத்தில் மலைரெட்டியூர் என்ற ஊரிலுள்ள செல்ராயன் என்ற கோயில் அதைவிடப் பிரசித்தி பெற்ற கோயிலாகும். பொதுவாக ஜவ்வாது மலையில் பல புராதனக் கோயில்கள் பல்லவர்களால் கட்டப்பட்டன என்பது வரலாறு. எனவே அந்தக் கோயில்களை எல்லாம் ஆய்வு செய்து, அவைகளில் திருப்பணி செய்வதற்கு அரசு ஒரு பொது நடவடிக்கையாக, 'காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம்' மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஜவ்வாது மலை மட்டுமல்ல. தமிழகம் முழுவதிலும் இருக்கக்கூடிய, அப்போதுள்ள மன்னர்களால் கட்டப்பட்டு, இன்றைக்குப் பாழ்பட்டிருக்கக்கூடிய நிலையில் பல திருக்கோயில்கள் இருக்கின்றன. நிதிநிலைக்கேற்ப எந்தெந்த கோயில்களை எடுக்கவேண்டுமோ, அவைகளை எடுத்து, திருப்பணிகள் செய்யப்படும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கூலி.

* 8050 திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் தனியார் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியைப் போல், தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

9-40 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நீலகிரி மாவட்டத்தில் தனியார் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலிக்கு இணையாக தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் கொடுக்க கடந்த மே மாதத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது. 1—1—1990 முதல் திருத்தி அமைக்கப்பட்ட சம்பள விகிதம், ஊதிய விகிதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தாயகம் திரும்பிய தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு தேயிலைத் தோட்ட வாரியம் சம சம்பளம் 1-ஆம் தேதியிலிருந்து கொண்டு வந்தமைக்காக தமிழ்நாட்டின் முதலமைச்சர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. கே. பி. கே. அவர்களுக்கும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தோடு அந்த .... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக் கேட்பவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் நன்றி தெரிவித்தல், பாராட்டுத் தெரிவித்தல் எல்லாம் வினா நேரத்தில் சேர்த்தால், அது பொருத்தமாக இராது. நல்ல மரபாக இருக்காது. நல்ல பண்பு என்பதை நான் மறுக்கவில்லை; ஆனால் மரபு அல்ல.

திரு. எம். கே. கரீம் : ஒரே ஒரு சின்ன விஷயம், சமீபத்தில் சின்கோனாவும் இதனுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் அந்தச் சம சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, கடந்த மே மாதம் 16-ஆம் தேதி ஊட்டியிலே தொழிற் சங்கத் தலைவர்களுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரீம் அவர்களும் கலந்து கொண்டார்கள். நானும் அங்கே இருந்தேன். அந்த சின்கோனா தொழிலாளர்களுடைய பிரச்சினையும் அங்கே எழுந்தது. இப்போது அந்தத் துறை, தேயிலைத் தோட்ட வாரியத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக இணை

யான சம்பளம் கொடுக்க முடியாது. பேச்சு வார்த்தைகளின் மூலமாக இப்போது சற்று உயர்த்தி, பிறகு படிப்படியாக இணையான சம்பளம் கொடுக்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி இருக்கும்படியான பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு நாம் இங்கே, தமிழ்நாட்டில் புதிய திட்டங்களை உருவாக்கி அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளது, ஒரு நல்ல வரவேற்கத்தக்க விஷயம். கூலியிலிருந்த வித்தியாசமும் எடுக்கப்பட்டு 1—1—1990 முதல் சமமான கூலி, தனியார் தேயிலைத் தோட்டங்களில் கிடைக்கக்கூடிய கூலி கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்தில் பிளான்டேஷன் ஆக்ட் பிரகாரம், சட்டப் பிரகாரம் உள்ள இதர சலுகைகளும்—அவர்களுக்கு இருக்கும்படியான சர்வீஸ் சலுகைகள், குடியிருக்கும் வீடு பற்றிய சலுகைகள், லீவு சலுகைகள் போன்றவை—அவர்கள் தகுதியான சம்பளம் பெறும் போது, அவற்றையும் அமல் ஆக்குவதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, 'TANTEA' என்று சொல்லப்படுகிற இந்தத் தேயிலைத் தோட்ட வாரியம் அந்தத் தொழிலாளர் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, இதுபற்றி முடிவு செய்ய அறிவுறுத்தலாம்.

பொதுப்பணித் துறையில் தினசரி பணியாளர்களாகப் பணி செய்பவர்களின் பணிகளை முறைப்படுத்துதல்.

* 7683 திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொதுப் பணித் துறையில் 18 ஆண்டுகளாக தினசரி பணியாளர்களாகப் பணி செய்பவர்களின் பணிகளை முறைப் படுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், காலதாமதத்தின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.